22nd October 1964]

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : (அ) சென்னை, பால் பண்ணைத் திட்டத்திலிருந்து இரண்டு பேர் டென்மார்க்கிலுள்ள பால் பண்ணைத்துறையில் மேல் பயிற்சி பெறுவதற்காக அனுப்பப்பட்டனர். 1962-ம் ஆண்டில் மத்திய பால் பண்ணை நிர்வாகி திரு. சி. ஆர். சீதாராமனும், 1963-ம் ஆண்டில் பால் பண்ணை மேற்பார்வையாளர் திரு. ஆர். பாலகிருஷ்ணனும் இப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டார்கள்.

(இ) டென்மார்க்கில் அவர்களுடைய பயிற்சி சம்பந்தமாக மாநில அரசாங்கம் சுமார் 4,000 ரூபாய் (நாலாயிரம் மட்டும்) செலவழித்தது.

திரு. து. ப. அழகமுத்து : இப்படி பயிற்சிக்குச் சென்று வந்த ஒரு உயர்தர அதிகாரி பயிற்சி முடிந்து வந்ததும் பால் பண்ணையில் தொடர்ந்து வேலையில் இல்லாமல் போய் விட்டார் என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அப்படியானால் பயிற்சிக்காகச் செலவு செய்யப்பட்ட பணம் என்ன ஆவது?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : பயிற்சி பெற்றவர்களில் இன்னொருவர் இனிமேல்தான் வரவேண்டும். அவர் நவம்பர் கடைசியில் வரவேண்டும். வந்துள்ள ஒருவர் இப்போது பால் பண்ணையில் இருந்து கொண்டிருக்கிறார்.

திரு. எஸ். ஜே. சாமசாமி : பயிற்சி பெற இரண்டு பேர்கள்தான் அனுப்பப்பட்டதாகக் கூறினார்கள் எத்தனை பேர்கள் விண்ணப்பம் செய்திருந்தார்கள் என்று அறியலாமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : நமக்கு இரண்டு பேர்கள் வேண்டியிருந்தது. அப்போது இரண்டு பேர்களை அனுப்பினோம். எத்தனை அப்ளிகேஷன் என்ற தகவல் இப்போது இல்லை. அதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

Zamin forests

* 63 *Q*.—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the Panchayats of Mittadhainahally, Mittareddihally, etc., in Dharmapuri taluk for the entrustment of a portion of Noolahally Reddihally Mitta forests and for transfer of the same as unassessed waste; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Sri N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) Yes.

(*b*) It is under consideration of the Government.

திரு. எம். வி. கரிவேங்கடம் : இது போன்று பல இடங்களில் ஜமீன் பிராந்தியங்களில் விவசாயத்திற்கு லாயக்கான நிலங்களைக் கூடக் காடுகள் என்று பிரித்திருக்கிறார்கள். அதனால்

[22nd October 1964

விவசாயிகளுக்குத் தொல்லையாக இருக்கிறது. விவசாயத்திற்கு லாயக்கான நிலங்கள் இவை, காடுகள் இவை என்று உண்மை நிலையை ஆராய்ந்து பார்த்து, விவசாய நிலங்களை விவசாயத்திற்குக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : ஜமீன் காடுகளை ஜமீன் ஒழிப்புத் திட்டம் வந்த காலத்தில் சர்க்கார் எடுத்துக்கொண்டது. இதிலே சிலவற்றைக் காடுகளாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்று தீர்மானித்து இன்று அவைகள் காட்டு இலாகாவின் பொறுப்பில் இருந்துகொண்டிருக்கிறது.

பஞ்சாயத்து யூனியன் ஊழியர்களுக்கான விதிகள்

* 64 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : } கனம் ஸ்தல
திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : }
நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து யூனியன்களில் பணிபுரியும் ஊழியர்களின் ஊதியம், ஊதிய உயர்வு, உத்தியோக உயர்வு ஆகிய உரிமைகளை வகைப்படுத்தும் தனி விதிகள் (Ad hoc rules) ஏற்படுத்தப் படவில்லை என்பது உண்மையா ?

(இ) அதன்மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) பஞ்சாயத்து யூனியன்களில் பணிபுரியும் ஊழியர்களின் உத்தியோக நிலை பற்றிய விதிகள் (தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம், 1958-ன் கீழ்) வகுப்பது குறித்த வரைவுகள் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருந்து வருகின்றன. இவ்விதிகள் வகுக்கப்படும் வரையில், சென்னை ஜில்லா போர்டு சட்டம் 1920-ன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள உத்தியோக நிலைமை பற்றிய விதிகள் மேற்படி ஊழியர்களுக்கும் பொருந்தும்படி செய்யப்பட்டிருக்கிறது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

9–30 a.m. **திரு. ம. கமலநாதன் :** இந்தப் பஞ்சாயத்து யூனியன் பணியாளர்களைப்பற்றி முதல் அமைச்சரிடத்தில் அவர்கள், அவர்களும் அரசாங்க ஊழியர்களைப்போலவே பலவித தொந்தரவுகளுக்கு உள்ளாகிப் பணிபுரிகிருர்கள். ஆகவே சம்பளம், பஞ்சப்படி முதலியவற்றில் அரசாங்க ஊழியர்களாகவே கருதப்படுவார்களா? என்று கேட்டபோது அவர்கள் சர்வீஸ் தனியானது, அவர்களுடைய சம்பள விகிதம் தனியாகவே இருக்கும் என்ருர்கள். அதைப் புதிதாக ஏற்படுத்த இருக்கும் விதிகளிலேயே ஏன் ஏற்படுத்தக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இந்த விதிகள் எல்லாம் தயாரானவுடன் பொதுஜன கருத்தை அறிய கெஜட்டில் பிரசுரிக்கப்படும். கனம் உறுப்பினர் தம் ஆலோசனைகளை எடுத்து அப்போது எழுதி அனுப்பினுல் பரிசீலிக்கப்படும்.